வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்—வான்மதி

தேதி 6.5.2025 நேரம் மாலை 6.10 மணி

-----------------------------------------------------------

<u>தலைப்புச் செய்திகள்</u>

- பஹல்காம் தீவிரவாத தாக்குதலின் பின்னணியில், பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று புதுடெல்லியில், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு. அஜீத் தோவலுடன், ஆலோசனை நடத்தி உள்ளார்.
- நாட்டின் 244 குடிமைப் பாதுகாப்பு மாவட்டங்களில் நாளை நடைபெற உள்ள குடிமைப் பாதுகாப்பு ஒத்திகைக்கான ஏற்பாடுகள் குறித்து, மத்திய உள்துறை செயலர், இன்று, மறுஆய்வுக் கூட்டம் நடத்தினார்.
- பல்வேறு துறைகள் சார்ந்த திறன்களுக்கு உலகில் தேவை அதிகரித்து வரும் நிலையில், இத்தேவைகளை நிறைவேற்றத் தக்க நிலையில் இந்தியா இருப்பதாக, வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் கூறி உள்ளார்.
- காரைக்கால் பண்டித ஜவஹர்லால் நேரு வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், அகில இந்திய அளவில் 7 விருதுகளை வென்றுள்ளது.

<u>*பிரதமர் சந்திப்பு* (8)</u>

பஹல்காம் தீவிரவாத தாக்குதல் தொடர்பாக, தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு. அஜீத் தோவல், பிரதமர் திரு. நரேந்திர மோடியை இன்று அவரது இல்லத்தில் சந்தித்துப் பேசினார். முன்னதாக, நேற்று பாதுகாப்பு துறைச் செயலர் திரு. ராஜேஷ்குமார் சிங், விமானப்படை தலைவர் ஏர் சீஃப் மார்ஷல் அமர் பிரீத் சிங் உள்ளிட்டோரும் இது தொடர்பாக

பிரதமரை சந்தித்து பேசி உள்ளனர். கடற்படைத் தலைவர் அட்மிரல் தினேஷ் கே திரிபாதி மற்றும் ராணுவ தலைவர் ஜெனரல் உபேந்திர த்விவேதி-யும் பிரதமரை தனித்தனியே சந்தித்து இருப்பதும் குறிப்பிடத் தக்கது.

<u>ஒத்திகை</u>

நாடு முழுவதும் குடிமைப் பாதுகாப்பு மாவட்டங்களாக வகைப்படுத்தப்பட்ட 244 மாவட்டங்களில் நாளை நடைபெற உள்ள குடிமைப் பாதுகாப்பு ஒத்திகைக்கான ஏற்பாடுகள் குறித்து, மத்திய உள்துறை செயலர் திரு கோவிந்த மோகன் இன்று மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேங்களின் தலைமைச் செயலர்களுடன், காணொளி காட்சி மூலம் மறுஆய்வுக் கூட்டம் நடத்தினார். புதுடெல்லியில் குடிமைப் பாதுகாப்பு துறை மற்றும் தேசிய பேரிடர் மீட்புப் படையின் தலைமை இயக்குநர்களும், இதர மூத்த அதிகாரிகளும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

<u>ஒத்திகை</u>
(வாய்ஸ்)

<u>போர்ச் சூழல் ஏற்பட்டால் எப்படி செயல்படுவது என்பது குறித்த குடிமைப் பாதுகாப்பு நடவடிக்கைகளின் ஒருங்கிணைப்பு மற்றும் செயல் திறனை மதிப்பிடும் நோக்கிலான இந்த குடிமைப் பாதுகாப்பு ஒத்திகை, கிராமங்கள் உட்பட பல்வேறு நிலைகளில் மேற்கொள்ளப்பட உள்ளது. வான் தாக்குதல் பற்றிய எச்சரிக்கை நடைமுறைகள், இந்திய விமானப் படையினர் உடனான ஹாட்லைன் மற்றும் ரேடியோ தொடர்பு வசதிகள், மற்றும், கட்டுப்பாட்டு அறைகளின் செயல்பாடுகள் சரியாக உள்ளதா என்பது குறித்து இந்த ஒத்திகையின் போது மதிப்பிடப்படும். அவசரகால இருட்டடிப்பு, போர் முக்கியத் துவம் வாய்ந்த கட்டிடங்களின் உருமறைப்பு,</u>

மற்றும், பாதுகாப்பான இடங்களுக்கு மக்களை மாற்றுவதற்கான திட்டங்கள் குறித்த பயிற்சிகளில், சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரும் ஈடுபடுத்தப்பட உள்ளனர். எதிரிகள் தாக்கினால் பாதுகாத்துக் கொள்வது எப்படி என்பது குறித்து, சிவிலியன்கள் மற்றும் மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கும் பணிகளும் இந்த ஒத்திகையில் அடங்கும். தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் தொடர்பான ஒத்திகையில் ஈடுபட நாடு முழுவதும் என்சிசி மாணவர்களும் முழு அளவில் முடுக்கி விடப்பட்டுள்ளதாக என்சிசி தலைமையகம் தெரிவித்துள்ளது.

*மோடி-ஆஸ்திரேலியா*

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று ஆஸ்திரேலிய பிரதமர் திரு ஆன்டணி அல்பனீசை தொடர்பு கொண்டு, 2-ஆவது முறையாக பிரதமர் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டதற்கு வாழ்த்து தெரிவித்தார். இருநாடுகளுக்கும் இடையிலான விரிவான கூட்டாண்மை உறவுகளை மேலும் வலுப்படுத்திக் கொள்ள, இரு தலைவர்களும் உறுதிப்பாடு வெளியிட்டனர். பிராந்திய பிரச்சனைகள் மற்றும் பரஸ்பர அக்கறை உள்ள சர்வதேச பிரச்சனைகள் குறித்து கருத்துக்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டன. இவ்வாண்டு இந்தியாவில் நடைபெற உள்ள குவாட் உச்சி மாநாட்டில் கலந்து கொள்ள இந்தியா வருமாறு ஆஸ்திரேலிய பிரதமர் திரு அல்பனீசுக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி அழைப்பு விடுத்தார்.

*ஆஸ்துமா தினம்*

ஆஸ்துமா நோயை ஆரம்ப கட்டத்திலேயே கண்டறிந்து உரிய சிகிச்சை அளிக்க வேண்டியதன் அவசியத்தை மத்திய சுகாதார அமைச்சர் டாக்டர் ஜே பி நட்டா வலியுறுத்தி உள்ளார். இன்று உலக ஆஸ்துமா தினத்தை ஒட்டி, சமூக ஊடகத்தில் வெளியிட்டுள்ள பதிவில், ஆஸ்துமா குறித்து விழிப்புணர்வை மேம்படுத்தி, நாட்பட்ட ஆஸ்துமா நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் மீதான அக்கறையை அதிகரிப்பதற்கான வாய்ப்பாக

இந்நாள் அமைவதாக கூறி உள்ளார். ஆஸ்துமா நோயினால் ஏற்படும் சிக்கல்களை குறைத்து நாட்டில் சுவாசம் தொடர்பான ஆரோக்கியத்தை மேம்படுத்த மருத்துவர்கள் கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் சமூகத்தினர் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்றும் அமைச்சர் வலியுறுத்தி உள்ளார். சுவாசம் தொடர்பான அறிகுறிகளை மக்கள் புறக்கணிக்க வேண்டாம் என்றும் சுவாசப் பிரச்சனையை தூண்டக் கூடிய காரணிகளை அனைவரும் தவிர்க்க வேண்டும் என்றும் மத்திய சுகாதாரத் துறை இணை அமைச்சர் திருமதி அனுப்பிரியா பட்டேல் கூறி உள்ளார். வாழ்க்கை முறைகளின் மேம்பாடு மாசுக் கட்டுப்பாடு மற்றும் விழிப்புணர்வு மூலமாகவே ஆஸ்துமா நோயை தடுக்க முடியும் என்றும் அவர் கூறி உள்ளார்.

<u>டிஜிட்டல்</u>

இந்தியாவில் கடந்த நிதி ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஐந்தில் நான்கு டிஜிட்டல் பரிவர்த்தனைகள், யுபிஐ வசதி மூலம் மேற்கொள்ளப்பட்டதாக ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது. யுபிஐ பணப் பரிவர்த்தனைக்கான கியுஆர் கோட் கட்டமைப்பு கடந்த நிதியாண்டில் 91.5 சதவிகிதம் விரிவடைந்து இருப்பதாகவும் இதனால் கிரெடிட் அட்டை மூலமான பரிவர்த்தனைகளின் வளர்ச்சி விகிதம், 7.94 சதவிகிதமாக குறைந்து இருப்பதாகவும் ரிசர்வ் வங்கியின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த நிதியாண்டில் யுபிஐ வசதி மூலம் 24.77 லட்சம் கோடி ரூபாய் அளவிற்கு பணப் பரிவர்த்தனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பரிவர்த்தனைகளின் எண்ணிக்கை அடிப்படையில் இது கடந்த ஆண்டை விட 36 சதவிகித வளர்ச்சியாகும்.

*ஜெய்சங்கர்*

பல்வேறு துறைகள் சார்ந்த திறன்களுக்கு உலகில் தேவை அதிகரித்து வரும் நிலையில் இத்தேவைகளை நிறைவேற்றத் தக்க நிலையில் இந்தியா இருப்பதாக வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் கூறி உள்ளார். இன்று புதுடெல்லியில், உலகிற்கான திறன்களை இந்தியாவில் இருந்து வழங்குதல் என்பது குறித்த GATI திட்டத்தின் தொடக்க விழாவில் உரையாற்றிய அவர் உலக நாடுகளில் மக்கள் தொகைக் கூறுகள் மாறி வருவதாலும் புதிய தொழில் நுட்பங்களின் வருகை, மற்றும், பணிக் கலாச்சாரத்தில் ஏற்பட்டு வரும் மாற்றங்களாலும், உலக அளவில் இந்தியத் திறன்களுக்கான தேவை அதிகரித்து வருவதாக கூறினார். சமகாலத்தின் இத்தகைய தேவைகளை பூர்த்தி செய்யும் நிலைக்கு இந்தியாவை உயர்த்தவே, பல்வேறு திறன் மேம்பாட்டு திட்டங்கள் மற்றும் தொழிற்கல்வி முயற்சிகளை அரசு மேற்கொண்டு வருவதாகவும், இதற்கு அப்பாற்பட்டு, நாடு முழுவதையும் இத்தகைய முயற்சிகளில் ஈடுபடுத்தும் அணுகுமுறைக்கு, அவசியம் இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

*ஜெய்சங்கர்*

(வாய்ஸ்)

தற்போது 34 மில்லியன் இந்தியர்கள் மற்றும் இந்திய வம்சாவளியினர் வெளிநாடுகளில் பணிபுரிந்து வருவதாக வெளியுறவு அமைச்சர் தெரிவித்தார். இதில் 3-ல் 1 பங்கினர், வளைகுடா நாடுகளிலும் மற்றவர்கள் இதர முன்னேறிய நாடுகளில் இருப்பதாகவும் அவர் கூறினார். அண்மைக் காலங்களில் ஜெர்மனி, ஆஸ்திரேலிய போன்ற நாடுகளில் இந்திய பணியாளர்கள் அதிகம் வரவேற்கப்படுவதை அவர் சுட்டிக்காட்டினார்.

குறிப்பாக வெளிநாடுகளின் கடல் வணிகம், விமானப் பயணம், விருந்தோம்பல் போன்ற துறைகளில் இந்தியர்கள் அதிகம் பயன்படுத்தப் படுவதாகவும் கொரோனா பெருந்தொற்றைத் தொடர்ந்து இத்துறைகளில்

சவால்கள் அதிகரித்து இருப்பதால், இந்தியாவிற்கு புதிய வாய்ப்புகள் திறக்கப் பட்டுள்ளதாகவும் வெளியுறவு அமைச்சர் தெரிவித்தார். செமி கண்டக்டர் போன்ற நவீன துறைகளில் ஆள் பற்றாக்குறை காரணமாக உலக அளவில் வளர்ச்சியே குறைந்துவிட்ட நிலையை, இந்தியா தான் சரிபடுத்த முடியும் என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

*காரைக்கால்-நெல்*

ஐதராபாத்தில் உள்ள நெல் ஆராய்ச்சி நிலையத்தில் நடைபெற்ற, வைர விழா நெல் ஆராய்ச்சியாளர்கள் கூட்டத்தில், அகில இந்திய அளவில் சிறந்த நெல் ஆராய்ச்சி நிலையத்திற்கான விருது உட்பட 7 விருதுகள், காரைக்கால் பண்டித ஜவஹர்லால் நேரு வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்திற்கு வழங்கப்பட்டன. நாடு முழுவதிலும் இருந்து நூற்றுக்கும் மேற்பட்ட ஆராய்ச்சி நிறுவனங்களைச் சேர்ந்த விஞ்ஞானிகள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு புதிய நெல் ரகங்கள் மற்றும் சாகுபடி தொழில் நுட்பங்கள் பற்றிய ஆராய்ச்சி முடிவுகளைப் பகிர்ந்து கொண்டனர். காரைக்கால் வேளாண் கல்லூரி முதல்வர் முனைவர் புஷ்பராஜ், சிறந்த ஆராய்ச்சி நிறுவனத்திற்கான விருதை, இந்திய நெல் ஆராய்ச்சி நிலையத்தின் இயக்குநரிடம் இருந்து பெற்றுக் கொண்டார். கல்லூரியின் பயிர் இனப்பெருக்க மற்றும் மரபியல் துறை பேராசிரியர் முனைவர் எஸ் திருமேனிக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட்டது. விருது பெற்றவர்கள் இன்று புதுச்சேரியில் முதலமைச்சர் திரு ரங்கசாமியை அவரது அலுவலகத்தில் சந்தித்து, விருதுகளை காண்பித்து வாழ்த்து பெற்றனர்.

***காரைக்கால் கால்நடை***

காரைக்காலில் கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் இன்று நடைபெற்ற, கால்நடை மற்றும் கோழிகள் எழில் கண்காட்சியில், குடிமைப் பொருள் வழங்கு துறை அமைச்சர் திரு திருமுருகன், மாவட்ட ஆட்சியர் திரு சோமசேகர அப்பாராவ் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு சிறந்த கால்நடைகளின் உரிமையாளர்களுக்கு பரிசுகளை வழங்கினர். புதுச்சேரி அரசு, விவசாயிகள் மற்றும் பொது மக்களைத் தேடிச் சென்று கால்நடைகளை வழங்கி வருவதாகவும், இதனால் கால்நடை உள்ளிட்ட ஆதாரங்கள் பெருகும் என்றும் அமைச்சர் கூறினார். கால்நடை பராமரிப்புத் துறையின் இணை இயக்குநர் டாக்டர் கோபிநாத் மற்றும் துறை சார்ந்த அதிகாரிகளும் பொது மக்களும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

***வானிலை***

தென்மேற்கு பருவமழை, அந்தமான் கடல் மற்றும் தென்கிழக்கு வங்க கடல் பகுதிகளில், வரும் 13-ஆம் தேதி வாக்கில் தொடங்க கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தற்போது வளிமண்டலத்தின் கீழடுக்கில், கிழக்கு மற்றும் மேற்குதிசை காற்று சந்திக்கும் பகுதி நிலவுவதால். இன்றைய தினம் தமிழகத்தில் ஒரு சில இடங்களிலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது. இன்றும் நாளையும் அதிகபட்ச வெப்பநிலை 2 முதல் 3 டிகிரி செல்சியஸ் வரை படிப்படியாக உயரக் கூடும் என்றும் அதன்பின்னர் 10-ஆம் தேதி வரை வெப்பநிலையில் பெரிய மாற்றத்திற்கான வாய்ப்பு குறைவு தான் என்றும் வானிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கிடையே கடந்த 24 மணி நேரத்தில் தமிழகத்தின் உள்மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் மழை பெய்துள்ளது. அதிகபட்சமாக தர்மபுரி மாவட்டம் பாலக்கோட்டில் 5 சென்டிமீட்டர் மழை பதிவாகி உள்ளது.

## ஐபிஎல்

ஐபிஎல் கிரிக்கெட்டில் இன்று இரவு 7.30 மணிக்கு மும்பையில் நடைபெறும் போட்டியில், மும்பை-குஜராத் அணிகள் மோத உள்ளன. டெல்லி-ஐதராபாத் அணிகளுக்கு இடையே ஐதராபாத்தில் நேற்று இரவு நடைபெற்ற போட்டி, மழை காரணமாக, பாதியிலேயே கைவிடப்பட்டது.

## செயற்கை நுண்ணறிவு

உலகிலேயே, சுயமதிப்பீடு அடிப்படையில் செயற்கை நுண்ணறிவு தொழில் நுட்பம் அறிந்தவர்களின் எண்ணிக்கை இந்தியாவில் தான் அதிகம் என்றும் இத்துறையின் வளர்ச்சிக்கான இந்தியாவின் உள்ளாற்றலுக்கு இதுவே ஆதாரம் என்றும் ஐ நா மேம்பாட்டு திட்ட அமைப்பு கூறி உள்ளது. இந்தியாவில் 5 மில்லியன் மென்பொருள் பொறியாளர்கள் இருப்பதால், செயற்கை நுண்ணறிவுத் துறையில் நீடித்த வளர்ச்சிக்கான எல்லா சாத்தியங்களும் இந்தியாவிற்கு உண்டு என்று UNDP அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் சுகாதாரம், வேளாண்மை உள்ளிட்ட பல்வேறு துறைகள், செயற்கை நுண்ணறிவு தொழில் நுட்பத்துடன் திறம்பட்ட முறையில் ஒருங்கிணைக்கப் பட்டுள்ளதால், புரட்சிகரமான தாக்கங்கள் ஏற்பட்டுள்ளதாகவும், விவசாயிகள் முதல் சிறு வணிகர்கள் வரை பல்வேறு தரப்பினரின் அதிகாரப் பங்கேற்பு மேம்பட்டுள்ளதாகவும் அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது. உலக அளவில் மானுட மேம்பாட்டுக் குறியீட்டின் வளர்ச்சி குன்றி வரும் நிலையில் மேம்பாட்டு முயற்சிகளை மீண்டும் தூண்டிவிட, செயற்கை நுண்ணறிவு தொழில் நுட்பம் அதிக வாய்ப்புகளை வழங்குவதாக UNDP மேலும் தெரிவித்துள்ளது.